நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களை கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்றல் பற்றி உயர்மட்டக் குழுவின் அறிக்கை.

47—(*வினா எண் 8538) திரு. ஆர். ரெங்கசாமி மற்றும் திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவது பற்றிய உயர்மட்ட அதிகாரிகள் குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பி விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இக்குழு 6–6–1984, 12–6–1984, 23–6–1984 மற்றும் 3–1–1986 ஆகிய நாட்களில் கூடியது. 6–6–1984, 12–6–1984 மற்றும் 23–6–1984 ஆம் நாளிட்ட கூட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றும்போது பணியாளர்களை எவ்விதம் மாற்ற வேண்டும், கட்டிடங்கள் மாற்றம், பண்டங்கள் வழங்குவது, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு நிதி அளிப்பது போன்றவை குறித்து ஆராயப்பட்டு அரசுக்கு குழுவின் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன. 3–1–1986 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் உச்சநீதி மன்றத்துக்கு பதிலளிப்பது குறித்து ஆராயப்பட்டு பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டன.

(இ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். உயர்நீதிமன்றம் அரசு ஆணைகளுக்கு இடைக் கால தடை விதித்துள்ளது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்று வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைச் சார்ந்த ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்படும்போது அதே சம்பளம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயலாது என்பதால்தான் வழங்கவில்லை.

1986 நவம்பர் 18]

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைச் சார்ந்த ஊழியர் களேசிவில் சப்ளை கார்ப்பரேஷனை நடத்த அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களே கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கடைகளை நடத்தப் போவது குறித்து பணியாளர்களே ஒரு செயல்முறைத் திட்டத்தை அரசுக்குத் தரவேண்டுமென்றும் அதுபற்றி அரசு முடிவெடுக்க வேண்டுமென் றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அத்தகைய செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் அரிசி.

48. (வினா எண் 9363) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் மதுரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவு மையங்களை சோதனையிட்டபோது சத்துண வுக்கு கொடுக்கும் அரிசியின் தரம் சரியில்லை என்று கூறியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திற்கு போதுமான அளவு வெள்ளை நிறம் கொண்ட சாதாரண ரக அரிசி (Common Variety) எல்லா மாவட்டங்களிலும் தொடர்ந்து வழங்கப்பட்டுவரவேண்டும், என்றும், அது போத வில்லை எனில் சன்னரக (Fine Variety) அரிசி வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிவப்பு நிறம் கொண்ட டிகேஎம் 9 ரக அரிசி தற்போது முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படுவதில்லை.

திரு. ப, ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திற்கு சிவப்பு நிறம் கொண்ட அரிசி வழங்கப்படுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உயர்ந்த ரக அரிசியே அங்கே வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள்